சுற்றுநிருப இல. 3/99

எனது இல. ~~என்பி/ கிழ/ எஸ்சு/ திட்/~~ ஐ,
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்.
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.
1999.10.19.

(10)

சகல பல நோ. கூட்டுறவுச்சங்கங்களின்
தலைவர்களுக்கும்,

## மாதிரி விற்பனை நிலையங்களை அமைத்தல் (Model Shops)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள ப.நோ.கூ.சங்கங்களில் பெரும்பாலானவை நட்டத்தில் இயங்கி வருகின்றன. மேலும் பல சங்கங்கள் நிர்வாக செலவிற்கான வருமானத்தைப் பெற முடியாத நிலையில் சேமித்த சொத்துக்களை இழக்கும் நிலையை அடைந்து வருகின்றன. அரசின் அனுசரணையுடனான சமுர்த்தி, நிவாரண, உலர் உணவுப்பொருள் விநியோகம் போன்ற நடவடிக்கைகள் நீக்கப்படும் பட்சத்தில் பெரும்பாலான ப.நோ.கூ.சங்கங்கள் முற்றாகச் செயலிழக்க நேரிடலாம்.

இந்நிலையில் மாற்று ஏற்பாடுகள் மிக அவசியமாகின்றன. ப.நோ.கூ.சங்கங்கள் அன்றும் இன்றும் ஒரேவழி முறையில் அமைந்த நுகர்ச்சி விற்பனை நடவடிக்கைகளையே பின்பற்றுவதால் நுகர்ச்சி வியாபாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. காலவோட்டத்ததிற்கமைவாக போட்டிச்சந்தைக்கு ஈடுகொடுக்கக் கூடிய விதத்தில் வியாபார முயற்சிகளை மாற்றி அமைத்தல் வேண்டும்.

அன்று கூட்டுறவுச்சங்கங்களை நாடிவந்த நுகர்ச்சியாளர்களை இன்று நாம் தேடிச்செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு அங்கத்தவர் பங்களிப்பு குறைந்தமையும் ஒரு காரணமாகும். எனவே, ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கமும் நுகர்வோரை கவரும் விதத்தில் ஆகக்குறைந்தது ஒரு மாதிரி விற்பனை நிலையத்தினையாவது ஆரம்பித்து உரிய முறையில் நிர்வகித்தலினூடாக சங்கத்தின் விற்பனையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இத்தகைய மாதிரி விற்பனை நிலையம் ஒன்றை அமைக்கும்பொழுது பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

01. குறிப்பிட்ட மாதிரி விற்பனை நிலையம் மக்கள் செறிந்துள்ள இடத்தில் வசதியான பாதுகாப்பான கட்டிடம் ஒன்றில் அமைதல் வேண்டும்.

02. இவ்விற்பனை நிலையத்தில் சாதாரண நுகர்வோர் ஒருவருக்கு தேவைப்படும் சகல விதமான பொருட்களையும் விற்பனைக்கு வைத்திருத்தல் வேண்டும்.

03. வியாபார நிலையம் எப்பொழுதும் துப்பரவாகவும், கவர்ச்சியாகவும், பொருட்கள் அழகாக காட்சிப்படுத்தப்பட்டும் இருத்தல் வேண்டும். அத்துடன் நுகர்ச்சியாளர்களை கவரும் வகையில் தேவையான சிறுவிளம்பரங்கள் செய்வதும் வியாபாரத்தை பெருக்கும் வழிமுறைகளாகும்.

04. நுகர்வோர் , ஓய்வுநேரங்களாகிய காலை, மாலைகளில் கூடுதலாக பொருட்களைக் கொள்வனவு செய்கின்றனர். எனவே அதற்கேற்ப வேலை நேரங்களை மாற்றி அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

05. சிறிய இலாப ஈவுடன், அதிக புரள்வு என்ற அடிப்படையில் நியாய விலையில் சிறந்த சேவை வழங்கப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

06. மிகக்குறைந்த எண்ணிக்கையிலான நேர்மையும் , திறமையும் மிக்க பணித்தொகுதி ஒன்றினை தெரிவுசெய்து சேவையில் ஈடுபடுத்தல் மிக முக்கியமானதாகும்.

07. பொருட்களைப் பொதி செய்து வைத்திருத்தல், இயந்திர மூலமான சிட்டையிடல், நுகர்வோர் இலகுவாக தெரிவுசெய்து எடுக்கக்கூடிய வகையில் பொருட்களை ஒழுங்குபடுத்தி வைத்தல், பொருட்களை பைகளிலிட்டு வழங்குதல் என்பன நுகர்வோரைத் திருப்திப்படுத்தும் சில வழிமுறைகளாகும்.

08. குளிர்சாதனப்பெட்டி அடங்கலாக தளபாட, உபகரண வசதிகளை வழங்குதல் மூலம் பொருட்கள் சேதமடைதல், பழுதடைதலைக் குறைக்கலாம்.

09. சங்க மொத்த நிலையத்தால் வழங்கப்படாத, நுகர்வோர் கேட்கும் பொருட்களை கொள்வனவு செய்து நிர்ணயிக்கப்பட்ட இலாப ஈவுக்கு மேற்படாது விற்பனை செய்யும் அதிகாரத்தினை அம் முகாமையாளருக்கு வழங்குவதுடன் இதற்கான முற்பணத்தையும் வழங்கி கட்டுப்படுத்தல் வேண்டும். இது சிறிய ரொக்கக் கட்டுப்பாட்டு முறையின்கீழ் செயல்படுத்தப்படலாம்.

10. நுகர்ச்சியாளர்களினால் கொள்வனவு செய்யப்படும் பொருட்களின் அடிப்படையில் பரிசுதியத்திட்ட முறையொன்றினை , காலாண்டு அல்லது வருடாந்த அடிப்படையில் அறிமுகப்படுத்தி, கூட்டுறவுத்தின விழாவன்று இதனை வழங்க நடவடிக்கை எடுக்கலாம்.

11. குறிப்பிட்ட பணியாளர்களுக்கான ஊக்குவிப்புத்திட்டமொன்றினை சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக வகுத்து, அவர்களை ஊக்குவித்தல் வேண்டும்.

12. மாதாந்த முன்னேற்றம் பற்றி ஆராய்ந்து விலகல் தொடர்பில் மாற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

13. பொருட்கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்துவதுடன் , எவ்வகையிலும் தரமற்ற பொருட்களை கொள்வனவு செய்து தேக்கமடையச்செய்தலை தவிர்த்தல் வேண்டும்.

14. பொருத்தமான பிரதேசங்களில் சுயசேவை அடிப்படையில் விற்பனை நிலையங்களை நடத்துதல் உகந்ததாக அமையும்.

15. கட்டிடம் , தளபாடம் , உபகரணம் போன்றவற்றை புதிதாகத் தேடவேண்டி ஏற்படுமிடத்து தற்பொழுது செயற்படும் பொருத்தமான கிளை நிலையமொன்றினை மாதிரிக்கடையாக மாற்றி அமைத்துக்கொள்ளலாம்.

எனவே மேலே தெரிவித்துள்ள கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கமும் ஜனவரி 2000ம் ஆண்டில் ஒரு மாதிரிக் கடையை ஆரம்பித்தல் வேண்டும். இவ்விடயம் தொடர்பாக உங்கள் பகுதி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரதும், கூட்டுறவு உத்தியோகத்தரதும் ஆலோசனைகளைப் பெற்றுச்செயல்படுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

(ஒப்பம்)

க.சிவசிதம்பரம்,
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்(வதி).

பிரதி: 1.சகல கூ.அ.உ.ஆணையாளர்களுக்கும்.

..............................

- முன்னுரிமை வழங்கிச் செயல்பட்டு மாதாந்த முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கவும்.